R4911

# A GREAT REFORMER
# ஒரு மகா சீர்திருத்தவாதி

எஸ்றா 8; 15-36

"எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார் மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறது."

ஒரு மாபெரும் சீர்திருத்த இயக்கத்தை தலைமை தாங்கி வழிநடத்தியவர் எஸ்றா என்ற ஒரு படித்த யூதன். அவர் தேவனுடைய பிரதிநிதியாக யூத நம்பிக்கையும், தேசத்தையும் பராமரிக்கக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றிருந்தார். நேபுகாத் நேச்சாரால் கைதிகளாக கொண்டு போகப்பட்டவர்களில் இவரது குடும்பமும் இருந்தது. அநேகம் பேர் பாபிலோனின் புதிய மண்ணில் வேரூன்றி இருந்தது போல, அவர்கள் கோரேஸ் ராஜா சந்தர்ப்பம் கொடுத்த போது எருசலேமுக்கு திரும்பின ஐம்பத்தி மூவாயிரம் பேர்களில் இருக்கவில்லை. தேவன் மற்றும் தேவனுடைய வசனம் மற்றும் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் மேல் இருந்த விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத ஆவியின் ஆவேசத்துடன் எஸ்றா, எருசலேமுக்கு இன்னொரு வகுப்பாரை, நாடு கடத்தப்பட்டு எழுபத்தி எட்டு வருடங்களுக்கு பிறகு வழிநடத்தினார்.

யூதர்கள் பாபிலோனில் உண்மையிலேயே செழுமையாக இருந்தார்கள். அவர்கள் நாடு கடத்தப்பட்ட சமயத்தில் பிரமாணங்களையும் தீர்க்கதரிசிகளின் போதனைகளையும் ஆர்வத்துடன் ஆராய்ந்தார்கள். உண்மையிலேயே யூதா, அதன் பிரதான பிரதிநிதிகளில் ஒருவராகிய எஸ்றாவின் கீழ் எருசலேமில் இருந்ததைக் காட்டிலும் பாபிலோனில் செழுமையாக இருந்தார்கள். எல்லோரும் அல்ல, பக்தியுள்ள குறிப்பிட்ட சிலர் மட்டுமே. எருசலேமில் இருந்து அவர்களது சகோதரர்கள் வறுமையில் இருந்தார்கள் என்பதைக் கேள்விப்பட்டு இவர்கள் வேதனை அடைந்தார்கள். மத காரியங்களும் அங்கே செழிப்பாக இல்லை. தெய்வீக பிரசன்னத்தை குறிப்பிடுகிற தேவாலயத்தை திரும்ப கட்டுதல் குறைவாகவே வேலை செய்தது.

மெய்யான மத மறுமலர்ச்சியில் ஆவலாயிருந்த எஸ்றா, பாபிலோனிய பிரதிநிதிகளுக்கு முன்பாகவும் பெர்சியா ராஜாவிற்கு முன்பாகவும் காரியங்களை வைத்து சாதகமான பலன்களை பெற்றார். எருசலேமில் யூதர்கள் மேலிருந்த அக்கறையினால் ஆலயத்தை பழுது பார்க்கவும் சரியான அடிப்படையில் ஆராதனை காரியங்களை ஏற்படுத்தவும் நன்கொடைகள் அதிகமாக கொடுக்கப்பட்டன. நன்கொடைகளின் மதிப்பு பொன், வெள்ளி எல்லாம் சேர்ந்து இருபது லட்சம் டாலருக்கும் அதிகமாக இருந்தது. செய்வதற்கு ஆர்வமுள்ள ஊழியர்கள் ஆயிரத்தி எழுநூறு பேர் இருந்தனர். நன்கொடைகள் ஒரு பொது ட்ரஸ்டாக இருந்தது. எஸ்றா அவற்றை ஞானமாக பிரித்து பன்னிரெண்டு பிரதானமான நபர்களிடம் கொடுத்து பற்றுச்சீட்டு வாங்கிக்கொண்டார்.

பிரயாணம் ஆரம்பிப்பதற்கு முன்னர் உபவாசம் அறிவிக்கப்பட்டது. சர்வ வல்லமையுள்ள தேவன் அவர்களை ஆசீர்வதிக்கவும் பிரயாணம் பண்ணுகிறவர்களை வழிநடத்தவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர்களிடம் பயம் இல்லாமல் இல்லை. ஏனெனில் அவர்கள் அதிகமான நிதியை எடுத்துச் செல்வது தெரிந்திருக்கும். அவர்கள் செல்லுகிற வழியில் இருந்த நாடுகள் மற்றும் கொள்ளைக்காரர்கள் மூலம் எந்த நேரத்திலும் பாதிப்பு ஏற்படலாம். அவர்கள் எடுத்துச் சென்றது பொன், வெள்ளியோடு கூட கோதுமை, திராட்சப் பழம், எண்ணெய் முதலானவைகளாக இருந்தன.

### "உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள்"

ஜெபத்துடனும், உபவாசத்துடனும் ஆரம்பித்த பிரயாணம் எஸ்றாவின் வல்லமை மற்றும் இயக்குத்திறனில் நமக்கு ஒரு உட்பார்வையை கொடுக்கிறது. "தேவன் அவருடன் இருந்தார்." அவர் தேவனுடன் நடந்து, அவரது சித்தத்தை அறிந்து அதை செய்ய நாடினார். யாராவது தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சித்து, அவருக்கு முன்பாக தங்களை தாழ்மைப்படுத்தாமல், அவரிடம் ஆசீர்வாதத்திற்காகவும், வழிநடத்துதலுக்காகவும் வேண்டுதல் செய்தால், அது நிச்சயமாக வீணாயிருக்கும். நாம் உபவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம் நம்மை அர்ப்பணித்து அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் ஆவலாய் இருப்பது அதிகமான நன்கொடையைக் காட்டிலும் மிகவும் பயன் அளிக்கக்கூடியது. அநேகர் மத காரியங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விட்டுவிட்டு, பொருள் சம்பாதிக்க முயற்சிக்கும் போது, கர்த்தர் அவரது ஆசீர்வாதத்தை அருளவில்லை என்றால், அவர்களது உழைப்பு வீணாகும் என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.

கடந்த நூற்றாண்டில் நமது ஆச்சரியமான பொருளாதார முயற்சி இருந்தும் தற்காலத்தில் புறஜாதியார் கடந்த நூற்றாண்டிற்கு முன்பு இருந்தது போல, இரண்டு மடங்காக இருந்தார்கள் என்கிற உண்மை "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக" என்கிற கர்த்தர் ஜெபத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. பூமியில் பரலோக நிலைமையை கொண்டு வர நாம் முயற்சித்தது பயனற்றது என்று கண்ட தேவனுடைய ஆவலுள்ள பிள்ளைகள் அனைவரும் தேவனுடைய வசனத்தை தேடுகிறார்கள். அதன் மூலம் மேசியாவின் இரண்டாம் வருகை அவரது மணவாட்டியாகிய அவரது "தெரிந்துகொள்ளப்பட்ட" சபையை இணைத்துக் கொள்வதற்கே என்று போதிக்கிறதோ இல்லையா என்பதைக் காண விரும்புகிறார்கள். அதன்பிறகு நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதையும் காண்கிறார்கள். அந்த ராஜ்யம் தெய்வீக வல்லமை மூலம் சாத்தானை கட்டி, பயத்தையும் மரணத்தையும் நீக்கிப் போட்டு, மனுக்குலத்தை உயர்த்தி, பூமியை ஒரு சொர்க்கமாக ஆக்கும்.

### மீறுதல்களின் வழிகள்

எஸ்றாவும் அவரது குழுவினரும் சரியாக நான்கு மாத பிரயாணத்தில் பாதுகாப்புடன் எருசலேமை அடைந்தார்கள். இப்போது இருக்கிற வசதிகளுடன் நான்கு நாட்களுக்குள்ளேயே அந்த தூரத்தை கடக்க முடியும். இவைகளெல்லாம் மகிமையான மேசியாவின் யுகத்திற்கு முன்னோடிகள்; நீண்ட நாட்களாக, சொல்லப்பட்டு வந்த ஆச்சரியமான செழிப்பு.

எருசலேமின் சீர்படுத்தலுக்காக தலைவரும் ஆலோசகரும் ஆன எஸ்றா குருகிய மற்றும் கொடூரமான மனமுடையவர் என்று கண்டிக்கப்பட்டிக்கிறார். பாபிலோனிலிருந்து முதலில் திரும்பிய யூதர்கள் தெய்வீக பிரமாணத்திற்கு வைராக்கியம் உடையவர்களாகவும்

அவர்களது அண்டை வீட்டாராகிய புறஜாதியாருடன் கலப்பு திருமணம் செய்து கொள்ளவோ, உறவு வைத்துக் கொள்ளவோ மறுக்கிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்களது செழுமை குன்றியதால் அவர்களது வைராக்கியம் தளர்வடைந்தது. அக்கறையின்மையும் மத சார்பின்மையும் நுழைந்தது. ஆகையால் அநேக யூதர்கள் புறஜாதியினருடன் திருமணம் செய்து கொள்வதை சீக்கிரத்தில் எஸ்றா கண்டார். அந்த நிலைமை அங்கு நிலவியது. அது தொடர்ந்தால் தேசம் கெட்டுப்போகும். தேவன் தேசத்தின் தொடர்ச்சிக்கான வாக்குத்தத்தத்தை கொடுத்திருந்தார். முடிவாக பூமியின் சகல வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்த வெளிச்சம் மற்றும் சத்தியத்தை அனுப்ப அவர்களை ஒரு ஜாதியாக பயன்படுத்துவேன் என்பதே அந்த வாக்குத்தத்தம்.

இஸ்ரயேலர்களின் ஒரு பொது மகா சபை கூட்டப்பட்டது. கலப்பு திருமணம் மற்றும் பிரமாணத்தின் தேவைகளை பரிசீலிக்க அந்த கூட்டம் நடைபெற்றது. இதில் தோல்வியுற்றால் யூத சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட அந்நியர்களாக கருதப்படக்கூடிய அபாயம் ஏற்படும். தெய்வீக பிரமாணத்துக்கு இசைவாக நடந்தால் குடும்ப உறவுகளை பிரிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை உணர்ந்ததால் அது அழுகையும் வருத்தமும் துன்பமும் உள்ள காலமாக இருந்தது. தெய்வீக பிரமாணம் மீறப்பட்டு இப்பொழுது அதன் தண்டனை உணரப்பட்டது. மீறுதலின் வழிகள் கடினமாக இருந்தன.

இஸ்ரயேல் தேசம் சீனாய் மலையில் தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்கு கீழாக இருந்தது என்பதை அறிந்தவர்கள் மட்டுமே நியாயப்பிரமாணத்தின் முக்கியத்துவத்தை புரிந்துக்கொள்ளக் கூடும். தேசமானது அந்த நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் கீழாக இருந்தது. அப்படிப்பட்ட பிரமாணம் வேறு எந்த தேசத்திற்கும் இருந்ததுமில்லை. இப்போது இருக்கவுமில்லை. இப்போது நியாயப்பிரமாணத்திற்கு கீழ் இல்லாமல் கிருபையின் கீழ் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு கூட கொடுக்கப்படவில்லை. யூதர்கள் இந்த பிரமாணத்திற்கு விசுவாசமாயிருப்பதை நாம் மறுக்கக்கூடாது. ஏனெனில் எப்பொழுதும் இருந்தது போல நியாயப்பிரமாணம் அவர்களை கட்டுப்படுத்துகிறது. எரேமியா 31:31–இல் குறிப்பிடப்பட்டிருக்கிற புதிய உடன்படிக்கை வரும்வரை நியாயப்பிரமாண உடன்படிக்கை அவர்களைக் கட்டுப்படுத்தும். தலையும் சரீரமுமாகிய மகா மேசியா புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார். இந்த சுவிசேஷ யுகத்தின் மேலான பலிகளின் இரத்தத்தினால் இந்த புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படும்.

இந்த பிரமாணத்திற்கு இசைவாக கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் கொடுக்கிற கட்டளை என்னவென்றால் அர்ப்பணம் செய்த கிறிஸ்துவின் சீஷர்கள் உலகத்தாரோடு கலப்பு திருமணம் செய்யக்கூடாது என்பதாகும். “கர்த்தருக்குள் இருக்கிறவர்களுடன்” மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும். (2 கொரிந்தியர் 6:14) இந்த கட்டளையில் தெய்வீக ஞானம் நிச்சயமாக இருக்கிறது. எனினும் இது ஒரு பிரமாணம் அல்ல. அர்ப்பணம் பண்ணாதவர்களை திருமணம் செய்திருக்கிற கிறிஸ்தவர்கள் அவர்களை விட்டு பிரியாமல் திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்.